நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 96/2015

வழக்கு சாட்சி : PW 10 (LW21)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராசு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | 70 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **11.06.2025**

(1வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முன் விசாரணை :**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது திருவாரூரில் வசித்து வருகிறேன். கடந்த 10.06.2013ம் தேதி நாகப்பட்டினம் நில அபகரிப்பு மற்றும் சிறப்பு தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மாலை 05.00 மணியளவில் துணை கண்காணிப்பாளர் உத்தரவு படி மனு எண். 143/CU/ALGSC/ NGT/ 13 என்ற மனு நடராஜன் என்பவரால் கொடுக்கப்பட்டது. அந்த மனுவை விசாரித்து காவல் நிலைய குற்ற எண். 07/2013 இதச பிரிவுகள் 467,468, 469, 471 ன் படி வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேல் விசாரணை செய்யும் பொருட்டு வழக்கு ஆவணங்களை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகார் நேரடியாக காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை. தபால் மூலமாக புகார் கொடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு புகார்தாரரையோ புகாரில் எதிரிகளாக காட்டப்பட்ட நபர்களையோ விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அரசு ஆணையின் படி தான் நில அபகரிப்பு பிரிவு செயல்படுகிறது என்றால்

சரி. எந்த ஒரு சட்டத்தின் அடிப்படையிலும் நில அபகரிப்பு பிரிவு செயல்படவில்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நில அபகரிப்பு பிரிவு செயல்படுவதற்கான அரசு ஆணையினை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து விட்டது என்றால் நினைவு இல்லை. ஆகவே, இந்த புகார் தொடர்பாக நில அபகரிப்பு தடுப்பு பிரிவு புகாரினை பதிவு செய்வதற்கோ, விசாரிப்பதற்கோ அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.